2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, பேரவைக்கான துணைத் தலைவர் தேர்தல். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன். அவர்கள் விவரம் வருமாறு :—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. எஸ். திருநாவுக்கரசு.

முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. கா. காளிமுத்து.

வழி மொழிந்தவர்—மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன்.

இரண்டாவது மனு—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. எஸ். திருநாவுக்கரசு.

முன்மொழிந்தவர்—திரு. பாண்டியன்.

வழி மொழிந்தவர்—திரு. கே. எம். அப்துல் ரசாக்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால் நான் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இந்தப் பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

முதலில் இந்த அவையின் முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பாராட்டிப் பேசுவார்.

பின்னர், இரங்கல் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இப்போது அவை முன்னவர் அவர்கள் பேசுவார்கள்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாமன்றத்தின் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் தலைவராக ஏகமனதாகத் தாங்கள் தேர்ந்தெடுத்திருப்பதை மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன்